டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்

agridoctor.in | 4.11.2025 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 111 - Madurai | Online Edition

# ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை எளிதாக்குவது குறித்த ஆலோசனைக் கூட்டம்

புது தில்லி, நவ.3

கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் உள்ள தேசிய புவி அறிவியல் ஆய்வு மையத்தில் (NCESS), 'ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை (R&D) எளிதாக்குவது' குறித்த 8வது பிராந்திய ஆலோசனைக் கூட்டம் அக்டோபர் 30 மற்றும் 31 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. நித்தி ஆயோக் ஏற்பாடு செய்திருந்த இந்த ஆலோசனைக் கூட்டத்தில், இந்தியாவின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் சூழலை வலுப்படுத்துவது குறித்து ஆழமாக விவாதிக்க, நிறுவனத் தலைவர்கள், துணை வேந்தர்கள் மற்றும் அறிவியல் அமைச்சகம், துறைகளின் முக்கியப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் தொடக்கத்தில், தேசிய புவி அறிவியல் ஆய்வு மைய இயக்குநர் பேராசிரியர் என்.வி.சலபதி ராவ் வரவேற்று பேசுகையில், அறிவியல் ஆய்வுக்கான சாதகமான சூழலின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். மேலும், புதுமையால் வழிநடத்தப்படும் வளர்ச்சியில் பிராந்திய ஆராய்ச்சி நிறுவனங்களின் பங்கையும் அவர் எடுத்துரைத்தார். நித்தி ஆயோக்கின் பேராசிரியர் விவேக் குமார் சிங், 'ROPE கட்டமைப்பு' (Removing Obstacles, Promoting Enablers – தடைகளை நீக்குதல், உதவுபவர்களை ஊக்குவித்தல்) என்ற அணுகுமுறையை அறிமுகப்படுத்தினார். இதுவே ஆராய்ச்சியை எளிதாக்குவது குறித்த நித்தி ஆயோக்கின் முயற்சிக்கு வழிகாட்டியாக அமையும் என்றார். இந்த யூநுஊணசி கட்டமைப்பானது, ஆராய்ச்சியாளர்கள் எதிர்கொள்ளும் நிறுவன மற்றும் கொள்கை அளவிலான சவால்களைக் கண்டறிவதோடு, அறிவியல் முன்னேற்றத்திற்கு உகந்த சூழலை உருவாக்க, நெகிழ்வுத்தன்மை, நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு மற்றும் திறன் மேம்பாடு போன்ற ஆதரவு வழிமுறைகளையும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அவர் வலியுறுத்தினார்.

புவி அறிவியல் அமைச்சகத்தின் செயலாளர் டாக்டர் எம்.ரவிச்சந்திரன், ஆராய்ச்சியின் செயல்திறனையும் தாக்கத்தையும் மேம்படுத்துவதற்கான இலக்கு சார்ந்த ஆலோசனைகளை வழங்கினார்.

ஒய்வுபெற்ற அறிவியல் திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல், பல்கலைக்கழகம்–தொழில் துறை–அரசு (UIG) சூழல் அமைப்பை வலுப்படுத்துதல், தனியாகச் செயல்படுவதற்குப் பதிலாக நிறுவனங்களிடையே தரவுப் பகிர்வை ஊக்குவித்தல் மற்றும் ஆராய்ச்சியின் முடிவுகளைச் சமூகத்துடன் தொடர்பு படுத்தும் வகையில் அறிவியல் தகவல்தொடர்புகளை மேம் படுத்துதல் போன்றவற்றை அவர் பரிந்துரைத்தார்.

**உள் மற்றும் வெளி காரணிகள் :** நித்தி ஆயோக்கின் உறுப்பினர் டாக்டர் வி.கே.சரஸ்வத், தனது உரையில், ஆராய்ச்சியை எளிதாக் குவது என்பது உள் மற்றும் வெளி காரணிகள் என்ற இரண்டு முக்கிய கூறுகளின் அடிப்படையில் அமைகிறது என்று எடுத்துரைத் தார். உள் காரணிகள் ஆராய்ச்சி நிறுவனங்களின் கட்டமைப்பு, நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளுடன் தொடர்புடையவை என்றும், வெளி காரணிகள் ஒழுங்குமுறைத் தடைகள், நிதி வழிமுறைகள் மற்றும் குறுக்குத் துறை ஒருங்கிணைப்பு ஆகியவற்றை உள்ளடக் கியவை என்றும் அவர் கூறினார். ஆராய்ச்சி மற்றும் புதுமையில் உலகளாவிய தலைவராக இந்தியா மாறுவதற்கு, இந்த இரண்டு பரிமாணங்களையும் ஒரே நேரத்தில் கையாள்வது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

**மாநிலத்தின் பங்கு :** இக்கூட்டத்தில் பங்கேற்ற கேரள ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், ‘ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை எளிதாக்குவது‘ என்பது குடிமக்களுக்கான ‘வாழும் வசதியை மேம் படுத்துதல்‘ என்ற பரந்த இலக்குடன் உள்ளார்ந்து இணைக்கப் பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். அறிவியலும் தொழில்நுட்பமும் மக்களை மையப்படுத்தப்பட்ட வளர்ச்சிக்கு இணங்க இருக்க வேண்டும் என்றும், நிறுவனங்கள், தொழில்கள் மற்றும் அரசாங் கங்களுக்கிடையேயான கூட்டு அணுகுமுறையே அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு முக்கியமாகும் என்றும் அவர் வலியுறுத் தினார். ‘மாநிலத்தின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும்‘ என்று ஆளுநர் கருத்துத் தெரிவித்தார். இதன் மூலம், பிராந்திய அளவில் வேரூன்றிய புதுமைச் சூழல் அமைப்பின் தேவையையும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி ஆய்வகங்கள் மற்றும் அரசுப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் அமர்வுகளுடன் இந்தக் கூட்டமானது நிறைவுற்றது. இதன் மூலம் இந்தியாவில் ஒரு சாதகமான, திறமையான மற்றும் கூட்டு ஆராய்ச்சி & மேம்பாடு சூழல் அமைப்பை உருவாக்க அனைவரும் உறுதி பூண்டனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## நெல்லிக்காயிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், நவ.3

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நெல்லிக் காயிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 4.11.25 மற்றும் 5.11.25 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருத மலை சாலை) நடைபெறும்.

கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- நெல்லி பானங்கள் – பழரச பானம் மற்றும் தயார் நிலை பானம்
- நெல்லி ஜாம்
- தேன் நெல்லி, நெல்லி கேண்டி, நெல்லி மிட்டாய், பொடி மற்றும் துருவல்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்–ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மக்காசோள வயல் தின விழா



பெரம்பலூர், நவ.3

பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காசோளம் அதிகளவு பயிரிடப் படுகிறது. இந்த மக்காசோள பயிரில் அதிகளவில் படைப் புழு தாக்குதலும் உள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் அதிகளவில் இரசாயன பூச்சி கொல்லிகளை உபயோகிப்படுத்து கிறார்கள்.

இதனை தவிர்க்க மற்றும் குறைக்க மத்திய மற்றும் மாநில அரசு இணைந்து 14 வார உழவர் வயல் வெளிப்பள்ளியை பெரம்பலூர் மாவட்டம், வெப்பந்தட்டை வட்டம், வெண்பாவூர் கிராமத்தை தேர்வு செய்து நடத்தி வந்தது. இந்த வயல் வெளிப்பள்ளியின் 14 வாரம் முடிவடைந்து வயல் தின விழாவானது 3.11.25 அன்று நடத்தப்பட்டது.

இந்த வயல் தின விழாவை ராதாகிருஷ்ணன், வேளாண்மை உதவி இயக்குனர் (துரக் கட்டுப்பாடு) தலைமை ஏற்று நடத்தி வைத்து பயிற்சியில் கற்றுக் கொண்டதை வரும் நாட்களில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சியை சேர்ந்த அமுதா, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர், தனது உரையில் மக்காசோள வயல் வெளிபள்ளியின் நோக்கம் நிறைவேற விவசாயிகள் கட்டாயம் செயல்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இதில் மொத்தம் 35 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்ததனர். மேலும் இந்த பயிற்சியில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சியை சேர்த்த நிசிந்தா & ராஸ்மி, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் மற்றும் ஜெயகாந்தன், தொழில்நுட்ப அலுவலரும் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# நெற்பயிர்களில் நச்சுயிரி மற்றும் இலையுறை அழுகல் நோய்க்கு தீர்வு

மதுரை, நவ.3

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டாரத்தில் சித்திரெட்டிபட்டி கிராமத்தில் பயிரிடப்பட்ட நெற்பயிர்களில் துங்ரோ நச்சுயிரி, இலையுறை அழுகல், தாக்குதல் தென்படுகிறது.

இது குறித்து விவசாயிகள் பத்திரிகை செய்தி வெளியிட்டதின் படி திருமங்கலம் வட்டார வேளாண்மைத் துறை அதிகாரிகள் மற்றும்






மதுரை வேளாண் அறிவியல் நிலைய பூச்சியியல் துறை இணைப் பேராசிரியர், கி.சுரேஷ், வேளாண் உதவி இயக்குநர் மு.மயில், வேளாண்மை அலுவலர், த.நரேஸ்குமார் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர், சுந்தரபாண்டியன் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் களஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வுக்குப் பின்பு பேராசிரியர் கூறுகையில் ஆல்கல் (யுடபயட ஸ்ரீயசயளவைந) நோய் பாதிக்கப்பட்ட நெல்வயல்களில் ஆல்கல் பாசிப் படலம் மண்ணில் மிகுந்து காணப்பட்டது. இதனால் நெற்பயிர்கள் வளர்ச்சி குன்றியும், காய்ந்தும் காணப்பட்டது. இவ்வகை பாசிப்படலம் மண்ணில் படர்வதால் வேர்கள் தேவையான சத்துக்களை எடுத்துக் கொள்ள முடியாமல் வளர்ச்சி தடைபடுகிறது.

வெப்பநிலை மிகக் குறைந்தும், காற்றில் ஈரப்பதம் மிகுதியாக இருப்பதால் பாசிப் படலம் அதிகமாக தென்பட்ட வயல்களில் துங்ரோ நச்சுயிரி பாதிப்பு அதிகமாகவும், பாசிப்படலம் குறைவாக தென்பட்ட வயல்களில் அதாவது கதிர்கள் உருவான வயல்களில் இலையுறை அழுகல் மற்றும் பாக்டீரியல் இலைக்கருகல் நோய் அதிகமாகவும் காணப்பட்டது.

ஆகவே இவ்வகையான நோய்கள் பாசிப்படலம் படிந்த வயல் களில் மிகுதியாக இருப்பதால் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அதிக தூர்கட்டும் பருவத்தில் காப்பர் சல்பேட் ஏக்கருக்கு 1 கிலோ என்றளவில் 1 கிலோ மணலில் கலந்து நெல் வயலில் விசிறி விட வேண்டும். துங்ரோ நச்சுயிரி நோய் பச்சைதத்துப் பூச்சியினால் பச்சைதத்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் மருந்தை 0.5மிலி/1லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பாக்டீரியல் இலைக் கருகல் மற்றும் இலையுறை அழுகல் நோயைக் கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸி குளோரைடு மருந்தை ஏக்கருக்கு 500 கிராம் என்றளவில் 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளிக்க வேண்டும். மற்றும் இலைசுருட்டுப் புழுவினை கட்டுப்படுத்த வேப்பங் கொட்டைச்சாறு அல்லது நீம்மசால் மருந்தினை லிட்டருக்கு 2 மில்லி தெளிக்க வேண்டும். நெல் வயல்களில் நோய்கள் தீவிரமாக பரவுவதற்கு முக்கிய காரணம் வயல் வரப்புகள் மற்றும் வயல்களில் களைகள், களைகளை எடுத்து மிகுந்து காணப்படுவதால் தான். எனவே அவ்வப்போது வயல் வரப்புகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று விவசாயி களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

**DOCTOR OF ASTROLOGY**

**பா.இளங்கோவன்**

M.Sc., MBA, D.Astro, Phd.,

**ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்**



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

**ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.**







**குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்**

**இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை**

**அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும் தொழில் வாய்ப்பு ஆலோசனை**

**திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை**

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# காளான் வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், நவ.3

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் நோயியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் காளான் வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்படி இம்மாத பயிற்சி 5.11.25 புதன்கிழமை காலை 10 முதல் மாலை 5 மணி வரை அளிக்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று பயிர் நோயியல் துறையில் பயிற்சிக் கட்டணமான ரூ.850/நபர் (வரி கட்டணம் உட்பட) செலுத்தி பயிற்சிக்கு பதிவு செய்து பயிற்சி திட்டத்தில் பங்கேற்கலாம். கல்லூரி மாணவர் களுக்கு ரூ.590/நபர் (அடையாள சான்று அவசியம்). பயிற்சியில் கலந்து கொள்பவர் களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422-6611336, 6611226, அலைபேசி : 96294 96555, 63792 98064, மின்னஞ்சல் : pathology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# வேளாண்மை மற்றும் காலநிலை மாற்றத்திற்கான உயிரி தொழில்நுட்ப தீர்வுகள்

கோயம்புத்தூர், நவ.3

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் தாவர உயிரி தொழில்நுட்பத் துறை இணைந்து, கார்பன் பிடிப்பு மற்றும் நிலைப்படுத்தல் : வேளாண்மை மற்றும் காலநிலை மாற்றத்திற்கான உயிரி தொழில் நுட்ப தீர்வுகள்' ஒரு நாள் கருத்தரங்கம் 1.11.25 அன்று நடத்தியது. 150-க்கும் மேற்பட்ட இளநிலை உயிரி தொழில்நுட்பவியல் மற்றும் உயிரி தகவலியல் மாணவர்கள் பங்கு பெற்று பயனடைந்தனர். கோவையில் உள்ள மாரிசிம் பயோலாஜிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இயக்குநர் டாக்டர் ப்ரீத்தி மாரிமுத்து சிறப்புரையாற்றினார். காலநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்யும் மற்றும் நிலையான விவசாய நடைமுறைகளை ஊக்கு விக்கும் வளர்ந்து வரும் உயிரி தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் குறித்த நுண்ணறிவுகளை குறித்த கருத்தரங்கமாகும்.



அதிகரித்து வரும் கார்பன் வெளியேற்றத் தால் ஏற்படும் உலக ளாவிய சவால்கள் மற்றும் விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளில் அவற்றின் நேரடி தாக்கத்தை பற்றி முனைவர் ப்ரீத்தி தனது சொற்பொழிவைத் தொடங்கி, கார்பன் அளவைக் குறைப்பதில் உயிரியல் அமைப்புகளின் பங்களிப்பினை எடுத்து ரைத்தார். குறிப்பாக கடற்பாசிகள் மற்றும் பூஞ்சைகளில் மண் வளத்தை மேம்படுத்துவதிலும் வேளாண் பொருட்களின் மகசூலை அதிகரித்து கார்பன் உற்பத்தி அளவை குறைக்கிறது என்று வலியுறுத்தினார். புதைபடிவ எரிபொருட்களைச் சார்ந் திருப்பதைக் குறைப்பதற்கான ஒரு பயனுள்ள மற்றும் சுற்றுச் சூழலுக்கு உகந்த அணுகுமுறையாக உயிரி எரிபொருட்களின் உற்பத்தியைப் பற்றியும் அவர் விவாதித்தார். மேலும், மீத்தேன் உற்பத்தி மற்றும் அதன் கட்டுப்படுத்தப்பட்ட பயன்பாட்டை உயிரி ஆற்றல் மூலமாக விரிவாகக் கூறினார். உயிரி தொழில்நுட்ப செயல் முறைகள் மூலம் நிர்வகிக்கப்படும் போது அது எவ்வாறு சுத்தமான மாற்று எரிபொருளாகச் செயல்படும் என்பதை வலியுறுத்தினார்.

மேலும், முனைவர் ப்ரீத்தி, மாணவர்களுடன் கலந்துரையாடலில், மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் பல்வேறு கேள்வி களுக்கு பதிலளித்தார். விவசாய அமைப்புகளில் கார்பன் நிலைப் படுத்தலைக் கண்காணித்து மேம்படுத்துவதற்காக தனது நிறுவனத் தின் புதுமையான தயாரிப்புகள் எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதை அவர் விளக்கினார். கூடுதலாக, உயிரி தொழில்நுட்ப மாணவர்கள் நிலையான வளர்ச்சி முயற்சிகளில் எவ்வாறு தீவிரமாக பங்கேற்கலாம் என்பது குறித்த மதிப்புமிக்க வழிகாட்டு தலை அவர் வழங்கினார். இன்று உயிரி தொழில்நுட்பத் துறையில் கிடைக்கும் பரந்த தொழில் வாய்ப்புகள் மற்றும் ஆராய்ச்சி வழி களை எடுத்துக்காட்டுகிறார். சுற்றுச்சூழல் மற்றும் விவசாய சவால் களை எதிர்கொள்வதில் உயிரி தொழில்நுட்பத்தின் முக்கிய பங்கைப் பற்றிய ஆழமான புரிதலை மாணவர்களுக்கு வழங்கி ஊக்க மளித்தார். தொடக்க நிகழ்வில் தாவர உயிரித் தொழில்நுட்ப துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஈ.கோகிலாதேவி வரவேற் புரை நிகழ்த்தினார். உயிரி தொழில்நுட்ப சிறப்பு மையம்மற்றும் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத் தின் இயக்குநர் முனைவர் என்.செந்தில் தொடக்க உரையாற்றினார். தாவர உயிரித் தொழில்நுட்ப துறை இணை பேராசிரியர் முனைவர் ச.வெள்ளைக் குமார் நன்றியுரையாற்றினார். இந்நிகழ்வை இணை பேராசிரியர் முனைவர் கே.ஹேமாப்ரபா மற்றும் உதவி பேராசிரியர் முனைவர் வி.ராஜன்பாபு ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

# கன்னியாகுமரி விவசாயிகளுக்கு காலநிலை மாற்றத்தை தாங்கவல்ல வேளாண் தொழில்நுட்ப பயிற்சி



கன்னியாகுமரி, நவ.3

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் நிதி உதவியுடன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் செயல்படும் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் கீழ் உள்ள காலநிலை மற்றும் பேரிடர் வேளாண் மகத்துவ மையம் (CoE-CDRA) மற்றும் வேளாண் அறிவியல் நிலையம் (ICAR- KVK), கன்னியாகுமரி இணைந்து, காலநிலை மாற்றத்தை தாங்கவல்ல வேளாண் தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி திருப்பதி சாரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியானது வேளாண்மை பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்குனர் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் எஸ்.சுரேஷ், தற்போதைய காலநிலை மாற்றங்கள் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விளக்கினார். வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் இணை பேராசிரியர் முனைவர் க.தீபாகரன், பல்வேறு ஆண்டுகளாக காலநிலை மாற்றங்கள் எவ்வாறு ஏற்பட்டுள்ளது என்பதை விளக்கினார்.

வேளாண் அறிவியல் நிலைய இணை பேராசிரியர் முனைவர் கே. கவிதா, வேளாண்மையில் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கான தகவமைப்பு (adaptation) நடைமுறைகள், தென்னை, மா மற்றும் நெல் பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை (IPDM) குறித்த கள செயல்விளக்கங்கள், வேளாண் மையில் சுற்றுச்சூழல் நட்பு முறைகளைப் பின்பற்றுவதன் முக்கியத் துவம் மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்தப் பயன்படும் பொறிகள் பாதுகாப்பான வேளாண் சூழல் உருவாக்கி, நீண்டகால காலநிலை மீள்தன்மையை வலுப்படுத்தும் என்று அவர் விளக்கினார்.

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தின் ஆராய்ச்சியாளர்களான முனைவர் ச.பவிஸ், முனைவர் க.செந்தில்ராஜா மற்றும் முனைவர் மா.தசரதன் ஆகியோர், வானிலை முன்னறிவிப்பு அடிப்படையிலான வேளாண் ஆலோசனைகளை வழங்கும் மொபைல் செயலிகள், மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி முயற்சிகள் மற்றும் இணையதளங்கள் பற்றிய செயல்விளக்கத்தை வழங்கினர்.

தொடர்ந்து, காலநிலை மாற்றத்தை தாங்கவல்ல பல்கலைக் கழகத்தின் புதிய பயிர் இரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்தி விளக்கினர்.

வறட்சி காலங்களில் பயிர்களின் தாங்குதிறனை ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்க ழகத்தின் பயிர் பூஸ்டர் (Crop Booster), இரயிஸ் ரீப் (Rice Reap), கிராப் ஷைன் (Crop Shine), பிபிஎப்எம் (PPFM) மற்றும் நானோ விகர் (Nano Vigour) போன்ற நவீன நுட்பங்கள் பற்றிய செயல் விளக்கங் களும் நிகழ்த்தப்பட்டன. பயிற்சியில் குமரி மாவட்டத்தின் 9 வட்டாரங்களைச் சேர்ந்த 50 முன்னோடி விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர்.



# தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவது எப்படி? இதற்காக மானியம் உண்டா?



தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற வேண்டிய சூழ்நிலை தற்போது உள்ளது. ஒருபுறம் மக்கள் தொகை பெருக்கம், மறு புறம் காலநிலை மாற்றத்தால் உண்டாகும் விளைவுகள். இதை எல்லாம் கருத்தில் கொண்டு தமிழக அரசு தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றும் திட்டம் 2020-21ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. (UP GRADE BARRAN LANDS FOR CULTIVATION).

**தரிசு நிலங்கள் என்றால் என்ன?**

தரிசு நிலம் என்பது பல்வேறு காரணங்களால், நீண்ட கால மாக பயிரிடப்படாத அல்லது சாகுபடி செய்யப்படாத நிலமாகும். இது நீர்ப்பாசன பற்றாக்குறை, மண் வளம் குறைதல் (SOIL FERTILITY) / களர் உவர் பிரச்சனைக்குரிய நிலமாக இருந் தாலும் கூட தரிசாக நிலங்களாக மாறும். சில சமயங்களில் விவசாயிகளே மண்ணின் வளத்தை மீட்டெடுப்பதற்காக வேண்டுமென சில ஆண்டுகள் நிலத்தை பயிரிடப்படாமல் போடுவதும் உண்டு. இந்தியாவில் மொத்த நிலப்பரப்பில் 18.72% தரிசாக உள்ளது. நம்முடைய தமிழகத்தில் ஏறக்குறைய 35லட்சம் ஏக்கர் நிலங்கள் தரிசாக உள்ளதாக தரவுகள் கூறுகின்றன.

**இதனை சீர்திருத்த என்ன செய்ய வேண்டும்?**

அனைத்து வட்டாரத்திலுள்ள சாகுபடிக்கான தரிசு மற்றும் இதர தரிசு நிலங்களை தங்களுடைய அலைபேசியில் உள்ள ‘உழவன் செயலி‘ மூலமாக விண்ணப்பிக்கலாம் இல்லாத பட்சத்தில் வேளாண் துறை அலுவலகத்தை நாடலாம்.

**பதிவு செய்ய தேவையான ஆவணங்கள்**

1) நிலத்தின் பட்டா சிட்டா அடங்கல்

2) நிரந்தர தரிசு என கிராம நிர்வாக அலுவலரின் சான்று புகைப்படம்

3) பின்னேற்பு மானியத்தை பெறுவதற்கு விவசாயிகளின் வங்கி கணக்கு நகல்

4) விவசாயியின் ஆதார் எண்

**தரிசு நிலத்தை எவ்விதமாக சீர்திருத்தப்படுகிறது**

1) நிலத்தில் உள்ள முட்புதர்களை அகற்றுதல் (சீமைக்கருவேல் உள்பட)

2) சட்டி கலப்பை போட்டு உழுத பின் களைச்செடிகள் இருந்தால் ரோட்டோட்டர் போட்டு உழவு செய்தல்

3) நிலத்தை சமப்படுத்துதல் (LEVELING)

4) கட்டுகளை உடைத்து நல்ல நிலங்களாக மாற்றிட உழவு போடுதல்.

இவை அனைத்தும் முடிந்த பின் விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக (BACK END SUBSIDY) அவரவர் வங்கி கணக்கில் ஆய்வுக்கு பிறகு வரவு வைக்கப்படும்.

**என்ன என்ன பயிர் சாகுபடி செய்யலாம்?**

பருவத்திற்கேற்றார் போல விவசாயிகள் உளுந்து, தானிய வகை அல்லது எண்ணெய் வித்துகள் என விருப்பத்திற்கேற்ப பயிரிடலாம். அதற்கான விதை உயிர் உரம் நுண்ணூட்ட உரங்கள் உயிரியல் காரணிகள் மானியமாக வழங்கப்படும்.

**மானியம் என்ன என்ன பயிருக்கு எவ்வளவு தெரியுமா?**

ஒரு ஹெக்டேர் உளுந்து, எள், தானிய பயிர்களுக்கு 13,400ம் நிலக்கடலை பயிருக்கு 22, 800 மானியமாக வழங்கப்படும்.

**இதை பெற வரைமுறை உண்டா?**

விவசாயி அதிகபட்சமாக 2 ஹெக்டேர் வரை பெறலாம். கலைஞரின் ஒருங்கிணைந்த அனைத்து கிராம வளர்ச்சி திட்டத்தில் (KAVI-ADP). கடந்த 4 ஆண்டுகளாக செயல்படுத்தப்படுத்தப்படுகிறது.

**இதற்கான வழிமுறைகள் என்ன?**

10 முதல் 15 ஏக்கர் தரிசாக உள்ள நிலத்தொகுப்பு. அதில் 8 விவசாயிகள் பயனாளிகளாக இருக்க வேண்டும்.இந்த நிலங்களின் தொகுப்பின் நடுவே வேளாண் பொறியியல் துறை வாயிலாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்சார இணைப்பு கொடுத்து பாசன வசதி செய்து தரப்படும். நிலத்தில் உள்ள முட்புதர்களை அகற்றி சமப்படுத்தி சாகுபடிக்கான நிலமாக மாற்றி மரக்கன்றுகள் நடவு செய்யலாம். எனவே தரிசாக நிலத்தை வைத்திருக்கும் விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திடலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தென்னை மற்றும் பாக்கு சாகுபடியில் மதிப்பு கூட்டல் தொழில்நுட்பங்கள் கண்டுணர் சுற்றுலா



ஈரோடு, நவ.3

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டார வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படுத்தப் படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்ம முகமை திட்டத்தின் மூலம் மத்திய தென்னை ஆராய்ச்சி நிலையம் காசர்கோடு விவசாய சுற்றுலாவானது கொடுமுடி வேளாண்மை உதவி இயக்குனர் வேலுச்சாமி, தலைமையில் நடைபெற்றது. இந்த கண்டுணர் சுற்றுலாவானது 27.10.25 - 31.10.25 வரை நடைபெற்றது.

இதில் 20 முன்னோடி தென்னை விவசாயிகள் கலந்து கொண்டனர். மத்திய தென்னை ஆராய்ச்சி நிலையம் தலைவர் பொன்னுசாமி, தென்னை ஆராய்ச்சி நிலைய செயல்பாடுகள் பற்றி விவரிவாக எடுத்து கூறினார். ஆர்.மாணிக்கம் (முதன்மை விஞ்ஞானி) தென்னையில் உள்ள ரகங்கள் மற்றும் அதை பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் பற்றி எடுத்துரைத்தார். சுப்ரமணியன், தென்னையில் நோய் மற்றும் பூச்சி மேலாண்மை அதை கட்டுப்படுத்தும் முறைகள் ஆகியவற்றை பற்றி தெளிவாக எடுத்து கூறினார். நிரல், தென்னையில் மதிப்பு கூட்டல் தொழில் நுட்பங்கள் பற்றியும் சிப்ஸ் தயாரிப்பது அதை பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் பற்றியும் எடுத்து கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை கொடுமுடி வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை அலுவலர்கள் மஞ்சுரேகா மற்றும் சிதம்பரம் செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

**PRODUCT RANGES**

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

**RITHVIK PIPES PROUDLY TRUSTED BY**

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# இப்கோ கள அதிகாரிகளுக்கான நானோ உர பயிற்சி முகாம்




திருச்சி, நவ.3

திருச்சியில், இப்கோ நிறுவனத்தின் கள அதிகாரிகளுக்கான நானோ உரங்கள் குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது.


இந்நிகழ்ச்சி தமிழ்நாடு மாநில விற்பனை மேலாளர் என்.சுரேஷ் தலைமையில் நடைபெற்றது.

பயிற்சியில், நானோ உரங்களின் நன்மைகள் மற்றும் அவை எவ்வாறு விவசாயிகளின் உற்பத்தி செலவை குறைத்து, விளைச்சலை அதிகரிக்க உதவுகின்றன என்பதற்கான விளக்கம் வழங்கப்பட்டது. மேலும் நானோ விற்பனை இலக்கை அடைவது பற்றிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.

இதனையடுத்து விவசாயிகளிடத்தில் நம்பிக்கை ஏற்படுத்தும் திறன், நேரடி கள விளக்கங்கள், நடத்தும் முறைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

நானோ யூரியா, நானோ டி.ஏ.பி., நானோ ஜிங்க் நானோ காப்பர் போன்ற தயாரிப்புகளின் நன்மைகள், பயன்படுத்தும் முறை மற்றும் பருவத்தின் அடிப் படையிலான பயன்கள் குறித்தும் தெளிவாக விளக்கப்பட்டது.

இறுதியில், அனைத்து கள அதிகாரிகளும் தங்கள் பகுதிகளில் நானோ உர விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேலும் வலுப் படுத்தும் உறுதியை எடுத்துக் கொண்டனர்.



# அட்மா திட்டத்தில் அயோத்தியாபட்டிணம் வட்டார விரிவாக்க அலுவலர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி




சேலம், நவ.3

சேலம் மாவட்டம், அயோத்தியா பட்டிணம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில், அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை அலுவலர்களான வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர், உதவி விதை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்கள், உதவி தோட்டக் கலை அலுவலர்கள் மற்றும் அட்மா திட்ட அலுவலர்களுக்கு வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா முன்னிலையில் வேளாண் பல்கலைக்கழகத்தால் நியமனம் செய்யப்பட்ட தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் சண்முகசுந்தரம் தொழில்நுட்ப பயிற்சி அளித்தார்.

காரீப் மற்றும் ராபி பருவத்தில் பயிர்கள் சாகுபடி மேற்கொள்வதற்கு முன் மண் மாதிரி எடுத்தல், பருவத்திற்கு ஏற்ற ரகங்கள், விதை அளவு, உயிரியல் மற்றும் பூஞ்சாண விதை நேர்த்தி செய்தல், களை எடுத்தல், உர நிர்வாகம், நீர் நிர்வாகம், பூச்சி மற்றும் நோய்களை ஒருங்கிணைத்து கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும், மா, வாழை, மஞ்சள் மற்றும் பூக்கள் சாகுபடி குறித்தும் பருவமழையில் பயிர்கள் பாதிக்கப்பட்டால் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துக் கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் செல்வி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் தமிழ்ச்செல்வி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# அங்கக வேளாண்மையில் திறன் மேம்பாட்டு பயிற்சி



கோயம்புத்தூர், நவ.3

கோயம்புத்தூர், வேளாண்மை அறிவியல் நிலையம் நடத்தும் அங்கக வேளாண்மையில் திறன் மேம்பாட்டு பயிற்சி வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் கடந்த ஐந்து நாட்களாக நடந்து கொண்டு வருகிறது.

இந்த பயிற்சியில் அங்கக வேளாண்மை சாகுபடி செய்வது பற்றி முழு விவரமாக எடுத்துரைக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி அக்டோபர் 28ஆம் தேதி தொடங்கி டிசம்பர் ஒன்றாம் தேதி வரை நடைபெறும்.

நேற்று பயிற்சியின் ஒரு பகுதியான பன்னிமடை கிருஷ்ண மூர்த்தியின் தோட்டத்தில் அங்கக வேளாண்மை சாகுபடி பற்றியும் ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றியும் விவசாயிகள் அனைவரும் நேரில் சென்று கற்றுக் கொண்டனர்.

மேலும் அவர் அங்கக வேளாண்மையில் ஒரு முன்னோடி விவசாயியாகவும் இருக்கிறார் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வகுப்புகளும் எடுத்துக் கொண்டு வருகிறார். அவர் ஒருங்கிணைந்த பண்ணையத்தில் கோழி வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல், மீன் வளர்ப்பு, மாடு மற்றும் ஆடு வளர்ப்பு அனைத்தும் ஒருங்கிணைந்து இயற்கை வேளாண்மை செய்து வருகிறார். மேலும் அவர் தோட்டத்தில் வாழை, பாக்கு, தென்னை, காப்பி மற்றும் மிளகு சாகுபடி செய்து கொண்டு வருகிறார். இந்த ஒருங்கிணைந்த பண்ணயத்தின் மூலம் கிடைக்கும் அனைத்து உரங்களையும் தனது தோட்டத்தில் உள்ள அனைத்து பயிர்களுக்கு உரமாக இயற்கை முறையில் சாகுபடி செய்கிறார். இந்த பயிற்சியில் 15-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்வமுடன் தங்களது சந்தேகங்களை கிருஷ்ண மூர்த்தியிடம் கேட்டு அறிந்து கொண்டனர்.

# மக்காச்சோளப் பயிரில் மெக்னீசியம் ஊட்டச்சத்து பற்றாக்குறை மற்றும் மேலாண்மை

- மக்காச்சோளம் குறைந்த நாட்களில் அதிக அளவு ஊட்டச்சத்துக்களை எடுத்துக்கொண்டு விளைச்சல் தரக்கூடிய ஒரு முக்கியப் பயிராகத் திகழ்கிறது.

- இரண்டாம் நிலை ஊட்டச்சத்தான மெக்னீசியம், பயிரில் போதுமான அளவு பச்சையத்தை (Chlorophyll) உற்பத்தி செய்து, பயிருக்கு தேவையான உணவைத் தயாரிப்பதில் முக்கியப் பங்கு



வகிக்கிறது. இதுமட்டுமின்றி, உற்பத்தி செய்யும் உணவைக் கிரகித்து ஆற்றலை, பயிரின் அனைத்துப் பகுதிகளுக்கும் அனுப்பும் பணியையும் செய்கிறது.

**மெக்னீசியம் பற்றாக்குறை ஏற்படுவதற்கான காரணங்கள்**

- **தொடர்ச்சியான சாகுபடி :** ஒரே பயிரைத் தொடர்ச்சியாகச் சாகுபடி செய்வது.

- **ஊட்டச்சத்து சமநிலையின்மை :** அளவுக்கு அதிகமான பொட்டாசியம், கால்சியம் மற்றும் தழைச்சத்து (Nitrogen) இடுவது, மெக்னீசியம் பயிர்களுக்குக் கிடைப்பதைத் தடை செய்கிறது இது சத்துக்களின் போட்டி எனப்படும்.

- **மண் பண்புகள் :** அதிக அமிலத்தன்மை மற்றும் மணல் பாங்கான (Sandy) மண்ணில் மெக்னீசியம் குறைபாடு அதிகம் காணப்படும், ஏனெனில் சத்துக்கள் எளிதில் கசிந்து வெளியேறலாம்.

- **ஈரப்பதம் :** தொடர்ச்சியான மழை அல்லது அதிகப்படியான மண் ஈரப்பதம் காரணமாக, சத்துக்கள் மண்ணுக்கு அடியில் சென்று விடுவதாலோ அல்லது பயிர்களால் சத்துக்களை எடுத்துக்கொள்ள முடியாத நிலை ஏற்படுவதாலோ குறைபாடு உண்டாகலாம்.

**மெக்னீசியம் குறைபாட்டின் அறிகுறிகள்**

- **ஆரம்பகால அறிகுறி :** பயிரின் அடி இலைகளில் (Older Leaves) வெளிர் பச்சை அல்லது மஞ்சள் நிறக் கோடுகள் / வரிகள் காணப்படும்.

- **நரம்புகளின் நிலை :** இந்த ஆரம்பநிலையில், இலையின் நரம்புகள் (Veins) மட்டும் பச்சை நிறமாகவே காட்சியளிக்கும்.

- **தீவிரமடைதல் :** பற்றாக்குறை தீவிரமடையும்போது, இலை நரம்புகளும் வெளிர் மஞ்சள் நிறமாக மாறி, இலை ஓரங்கள் சிவப்பாக மாறலாம்.
- **விளைவு :** இந்த அறிகுறி அடுத்தடுத்த இளம் இலை களுக்குப் பரவுவதால், பயிரின் ஒளிச்சேர்க்கை திறன் குறைந்து, குன்றிய வளர்ச்சி காணப்படும்.

- **இழப்பு :** நாள்பட்ட மெக்னீசியம் ஊட்டச்சத்து பற்றாக்குறை, கண்டிப்பாக மகசூல் இழப்பை ஏற்படுத்தும்.

**மேலாண்மை முறைகள்**

**தடுப்பு முறைகள் சாகுபடி மேலாண்மை**

● **பயிர் சுழற்சி (Crop Rotation) :** பயிர் சுழற்சி மிகவும் அவசியம். இல்லையெனில், ஒரே விதமான ஊட்டச்சத்துக்கள் மண்ணிலிருந்து பயிர்களால் எடுத்துக்கொள்ளப்படுவதால் மண் வளம் குறையும்.

● **மண் பரிசோதனை :** மண்ணைப் பரிசோதனை செய்து, அதன் அடிப்படையில் சரிவிகித அடிப்படையில் (Balanced Nutrition) போதுமான அளவு உரங்களை இடுவது அவசியம்.

● **நீர் மேலாண்மை :** நல்ல வடிகால் வசதியை (Drainage) ஏற்படுத்த வேண்டும். நீர் தேக்கம் அல்லது தொடர்ச்சியான மண் ஈரப்பதம் பயிர் வளர்ச்சியைப் பாதிக்கும்.

● **உரப் பயன்பாட்டைக் குறைத்தல் :** அளவுக்கு அதிகமான தழைச்சத்து, கால்சியம் மற்றும் பொட்டாசியம் இடுவதைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

**சத்துக்களை அளிக்கும் முறைகள்**

● **மழைக்கால மேலாண்மை :** மழைக்காலங்களில், சத்துக்கள் கசிவதைத் தடுக்கத் தேவையான உரங்களைப் பிரித்து, (Split application) கொடுக்க வேண்டும். சொட்டுநீர் உரப்பாசனம் (Fertigation) முறை மிகவும் சிறந்தது.

● **இயற்கை வழிமுறைகள் :**

‣ இயற்கை முறையில் சாகுபடி செய்பவர்கள் மெக்னீசியம் ஊட்டச்சத்தை மீன் அமிலம், எலும்பு உரம் (Bone Meal), கடல் பாசி உரம் (Seaweed Extract) மற்றும் முட்டை எலுமிச்சை கரைசல் போன்றவற்றை இலைவழியாகப் பயன்படுத்தி அளிக்கலாம்.

‣ டோலமைட் (Dolomite) இடுவது, மண்ணின் அமிலத் தன்மையைச் சரிசெய்து மெக்னீசியத்தைக் கிடைக்கச் செய்யும்.

● **இரசாயன வழிமுறைகள் உடனடி தீர்வு :**

‣ **மண்ணில் இடுதல் :** இரசாயன முறையில் சாகுபடி செய்பவர்கள் மெக்னீசியம் சல்பேட் (Magnesium Sulphate), பாலி சல்பேட் (Poly Sulphate) போன்ற உரங்களை இடலாம்.

‣ **இலைவழித் தெளிப்பு (Foliar Spray) :** உடனடி தீர்வுக்கு, நீரில் கரையும் வடிவில் உள்ள மெக்னீசியம் சல்பேட்டை (0.5% கரைசல் ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் 1 கிலோ) வாங்கி, அதை இலை வழியாகத் தெளித்து வந்தால், குறைபாடு விரைவில் நிவர்த்தியாகும் என சேலம் மாவட்டம், சங்க்கிரி வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா தெரிவித்தார்.

# மக்காச்சோள பயிரில் சிறந்த வேளாண் நடைமுறைகள் குறித்த விவசாயிகள் பண்ணை பள்ளி நடைபெற்றது


மதுரை, நவ.3

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டாரம், வேளாண்மை துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் 2025-26 ஆம் ஆண்டு சித்திரெட்டிபட்டி கிராமத்தில் மக்காச்சோள பயிரில் சிறந்த வேளாண் நடைமுறைகள் குறித்த விவசாயிகள் பண்ணை பள்ளி 3.10.25 அன்று நடைபெற்றது.

வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சியியல் துறை இணை பேராசிரியர் முனைவர் சுரேஷ், மக்காச்சோள பயிரில் ஏற்படும் பூச்சி தாக்குதல் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் மக்காச்சோள பயிரினை தாக்கும் படைப்புழு மேலாண்மை குறித்து விளக்கம் அளித்தார். கோடை உழவு செய்வது வேப்பம் புண்ணாக்கு இடுதல் மற்றும் மஞ்சள் நிற பூக்கள் பயிர்களை வரப்பு பயிராக பயிரிடுதல் இனக்கவர்ச்சி பொறி, விளக்கு பொறி அமைத்தல் வேண்டுமென கூறினார். பயிற்சியில் வேளாண்மை அலுவலர் நரேஷ் குமார், வேளாண்மை துறையின் மானிய அடையாள பதிவது குறித்து எடுத்துக் கூறினார். ஆத்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும் பண்ணை பள்ளியின் செயல்பாடுகள் குறித்தும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் புஷ்பமாலா, விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் சுந்தர பாண்டியன் நானோ யூரியா குறித்து எடுத்து கூறி நன்றியுரை ஆற்றினார்.

கூட்டத்திற்கான ஏற்பாட்டினை உதவி தொழில் நுட்ப மேலாளர் பூவேந்திரன் செய்திருந்தார். விவசாயிகள் மக்காச்சோள வயலினை பார்வையிட்டு படைப்புழு தாக்குதல் பரிந்துரைகளை வேளாண்மை துறை மற்றும் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானி இணைந்து கூட்டு ஆய்வு நடத்தப்பட்டு கூறப்பட்டது.




கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்
Toll Free No. 1800 - 4257333

# சுண்ணாம்பு மண் - ஒரு பார்வை

## (நிர்வாகப் பார்வை : விவசாயிகளுக்கான சுலபமான வழிகாட்டி)

விவசாயம் என்பது தமிழ்நாட்டின் பொருளாதாரத்துக்கும் கிராமப்புற வாழ்வுக்கும் அடிப்படை. நிலத்தின் தன்மை மற்றும் மண்சார்பு சரியான விதத்தில் புரிந்து கொள்ளப்படாதால் பயிர்ச் செயலில் பாதிப்பு ஏற்படும்.

நமது தமிழகப் பகுதிகளில் குறிப்பாக உலர் நிலப்பரப்புகளில் காணப்படும் ஒரு முக்கிய மண் வகை "சுண்ணாம்பு மண்" ஆகும். இந்த மண் வகையில் சுண்ணாம்புச் சத்து (Calcium carbonate-$CaCO_3$) மிக அதிகமாக காணப்படும். இந்த சுண்ணாம்பு சத்து காரணமாக மண்ணின் pH அளவு 7.5 முதல் 8.5 வரை இருப்பது மரபான தன்மையாகும்.

தரமான விளைச்சலை பெற சுண்ணாம்பு மண்ணை அறிவியல் முறையில் பராமரிப்பது மிக அவசியமானது.

**சுண்ணாம்பு மண் என்றால் என்ன?**

- சுண்ணாம்பு (Calcium carbonate-$CaCO_3$) அதிகம் கொண்டது,
- நுண்ணுசார்புச் சத்துகள் குறைவாக உள்ளது,
- சிறிது தரிசு நிலை தன்மை கொண்டது.
- மண்ணில் 15 சதவிகிதத்திற்கு மேல் சுண்ணாம்பு கலந்திருந்தால் அதனை சுண்ணாம்பு மண் என அழைப்பார்கள்.

**உருவாக்கம் மற்றும் காணப்படும் பகுதிகள்**

**உருவாக்கம்**

- கற்கல்களான சுண்ணாம்பு கல், டோலமைட் கல் போன்றவை காலப்போக்கில் பொடிந்து உருவாகும்.
- பாலைவன மற்றும் அரை உலர் பகுதிகளில் மழை குறைவாக இருந்ததால் சுண்ணாம்பு கரைந்து கீழ்நிலைக்கு செல்வதில்லை.

**தமிழகத்தில் காணப்படும் பகுதிகள்**

- திருச்சி
- கரூர்

- திண்டுக்கல்
- மதுரை
- சிவகங்கை
- தஞ்சாவூர் பகுதிகள் சில.

**சுண்ணாம்பு மண்ணின் முக்கிய பண்புகள்**

| **பண்பு** | **விளக்கம்** |
| --- | --- |
| pH | 7.5 – 8.5 (அதிககார தன்மை) |
| நிறம் | மாச்சிகை கறுப்பு அல்லது சாம்பல் |
| வடிவமைப்பு | நடுத்தர அல்லது கனமண் |
| சுண்ணாம்புச் சத்து | மிக அதிகம் |
| நீர் ஊடுருவல் | மிதமானது |
| ஊட்டச்சத்து | P, Fe, Zn, Mn குறைபாடு அதிகம் |



**பயிர் வளர்ச்சியில் ஏற்படும் சிக்கல்கள்**

- பாஸ்பரஸ் (P) மண்ணில் இருந்தாலும் பயிர் எடுப்பதற்கு கடினம்.
- இரும்பு (Fe), துத்தநாகம் (Zn), மாங்கனீஸ் (Mn) போன்ற நுண்ணூட்டச் சத்து தட்டுப்பாடு.
- வேர் வளர்ச்சி மந்தம்.
- இலைகளில் குளோரோசிஸ் (மஞ்சள் நிறம்) ஏற்படும்.
- இறுதி விளைச்சல் குறைவு.

**நுண்ணூட்டச் சத்துக்குறை அறிகுறிகள்**

| **சத்து** | **அறிகுறி** |
|---|---|
| Fe (இரும்பு) | இளம் இலைகள் மஞ்சள், நரம்புகள் மட்டும் பச்சை |
| Zn (துத்தநாகம்) | இலைகள் சிறியது, தண்டுகள் குறுகியது |
| P (பாஸ்பரஸ்) | தாவரத்தின் வளர்ச்சி மந்தம், இலைகள் ஊதா நிறமுறிவு |

**மேம்படுத்தும் அறிவியல் மேலாண்மை முறைகள்**

**1. கரிமப் பொருட்கள் சேர்த்தல் :** பசளைத்தூள், கம்போஸ்ட், பசுக்கழிவுகள் ஹ்யூமிக் அசிட் (Humic acid) கலந்த உரங்கள்

**2. சல்பர் சேர்த்தல் :** Elemental Sulphur மண்ணின் pH யைக் குறைத்து சுண்ணாம்பு செயல்பாட்டை கட்டுப்படுத்தும் (உதாரணம்: 10-15 kg Sulphur/acre)

**3. அமிலிகர உரங்கள் பயன்படுத்துதல் :** அமோனியம் சல்பேட் யூரியா (கட்டுப்பாட்டு அளவில்)

**4. நுண்ணுசத்துகளை இலைமூட்டித் தெளித்தல் :** 0.5% $FeSO_4$ + 0.25% $ZnSO_4$ 10 நாட்கள் இடைவெளியில் 2–3 தடவை.

**5. பாஸ்பரஸ் உரம் சரியான முறை :** வேர் மண்டலம் முழுவதும் ஊட்டச்சத்து விநியோகம், பாஸ்பரஸ் கரையக்கூடிய பசளை கலவை (உதாரணம் : DAP + நாசோபாக்டீரியா / பாஸ்போபாக்டீரியா)

**6. நீர் மேலாண்மை :** தண்ணீர் தெளிவு முறைகளை பயன்படுத்துதல் – டிரிப் ஈரிங்க் அல்லது மழைநீர் சேமிப்பு வழிகள் பயிர்களுக்கு மிகச் சிறந்தது. அதிக நீர் தேவைப்படும் பயிர்களை. வெவ்வேறு காலத்தில் நடுவது.

**சுண்ணாம்பு மண்ணில் சிறப்பாக விளையும் பயிர்கள்**

| **பயிர்கள்** | **எடுத்துக்காட்டுகள்** |
|---|---|
| தானியங்கள் | சோளம், மக்காச்சோளம் |
| பருப்பு வகைகள் | பயிறு, கொண்டைக்கடலை |
| எண்ணெய் விதைகள் | நிலக்கடலை, எள்ளு |
| தோட்டக்கலை | மாதுளை, அத்தி, கொய்யா |
| காய்கறிகள் | முருங்கை, வெள்ளரி, தக்காளி |

**பயனர் பரிந்துரைகள்**

1. மண்ணை முறைப்படி மண் பரிசோதனை செய்வது
2. கரிமப் பொருட்கள் அடிக்கடி சேர்த்தல்
3. நுண்ணுசத்து தெளிப்பு அட்டவணை பின்பற்றல்
4. இடைவெளியில் பயிர் மாற்றுச் சுழற்சி செய்யுதல்
5. மண் ஈரப்பத பேண மூடாக்கு முறை பயன்படுத்துதல்

**பொருளாதார நன்மைகள்**

- மண் தரம் படிப்படியாக மேம்படும்.
- உரச் செலவு குறையும்.
- பயிர் விளைச்சல் நிலையான அளவில் உயர்வு.
- நிலத்தின் நீண்டகால உற்பத்தி திறன் பாதுகாக்கப்படும்.

சுண்ணாம்பு மண் என்பது சவாலான மண் வகை எனினும் சரியான மண்ணியல் மேலாண்மை, நுண்ணுசத்து வழங்கல், கரிமப் பசளை பயனாக்கம் போன்ற அறிவியல் நடைமுறைகளைப் பின்பற்றினால் சிறந்த விளைச்சலைப் பெறலாம். மண் நலன் காக்கப்படும் போது தான் பயிரும் நலமாகும்.



கட்டுரையாளர் : **விக்னேஷ்.தே, உதவி பேராசிரியர், மண் அறிவியல் மற்றும் வேளாண்மை வேதியியல், நாளாந்த வேளாண்மை கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. மின்னஞ்சல் :** harish vignesh143@gmail.com, **தயாநிதி.சி, உதவி பேராசிரியர், மண் அறிவியல் மற்றும் வேளாண்மை வேதியியல்,** JKKM **வேளாண்மை கல்லூரி, ஈரோடு, தமிழ்நாடு. மின்னஞ்சல் :** dhayanithi.chinniyan @gmail.com.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**